மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 28–ம் நாள் சனிக்கிழமை

அ.வ.எண். 94/23

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: நம்பி | தேதி : 28.03.26 |
| வயது : | த/பெ :கந்தகோனார் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

**28.03.26 குறுக்கு விசாரணை**

1.பாக்கி கிரைய தொகை ரூபாய் 10 ஆயிரத்தை பெற்றுக்கொண்டு கிரைய பத்திரம் எழுதி தரவேண்டும் என்று தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கொடுத்ததாக கூறும் ரூபாய் 70 ஆயிரத்தை பிரதிவாதி கடனாக தான் வாங்கினார் என்றால் சரியல்ல. முன்பணமாக வாங்கினார். பிரதிவாதியை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. பிரதிவாதியை நேரடியாக தெரியும் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2.பிரதிவாதியை வரதராஜபுரத்தை சார்ந்த கண்ணன் மூலமாக தான் தெரியும் என்றால் சரியல்ல. நான் ரூபாய் 70 ஆயிரத்தை வாதிக்கு வட்டிக்கு கொடுத்ததால் தான் கிரையம் எழுதி பெறவில்லை என்றால் சரியல்ல. ரூபாய் 10 ஆயிரத்தை செலுத்த எதற்கான 3 ஆண்டு கால அவகாசம் தேவை என்பதை குறித்து கிரைய ஒப்பந்தத்தில் சொல்லவில்லை என்றால் பிரதிவாதி கேட்டதால் 3 வருடம் போடப்பட்டுள்ளது.

3.கிரைய ஒப்பந்தத்தில் வெறும் ரூபாய் 10 ஆயிரத்திற்கு 3 வருடம் கால அவகாசம் வட்டி பெறும் நோக்கத்திற்காக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி ரூபாய் 70 ஆயிரம் கடன் தொகைக்கு அடைமான பத்திரம் எழுதி தருவதாக சொன்னதற்கு கிரைய ஒப்பந்தம் எழுதி தந்தால் தான் கடன் தருவேன்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.28 18:07:45 +0530

என்று கூறியதால் பிரதிவாதி கிரையம் ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாங்கி கடன் தொகைக்கு நான் அவரிடம் பலமுறை நேரில் சந்தித்து வட்டி தொகை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

4.10.08.2022 ம் தேதி நான் பிரதிவாதியை நேரில் சந்தித்து கிரைய ஆவணம் எழுதி தர கேட்டதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 16.09.2022 ம் தேதி பிரதிவாதியை நேரில் சந்தித்து கிரையம் எழுதி கேட்டதாகவும் பிரதிவாதி 30.09.2022 ல் கிரையம் எழுதி தருவதாக சொன்னதாகவும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 01.10.2019 ம் தேதி பிரதிவாதியிடம் நேரில் சந்தித்து கிரையம் செய்து தர கேட்டதாகவும் அதற்கு 06.10.2022 ல் பிரதிவாதி கிரையம் செய்து தருவதாகவும் சொன்னார் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5.பிரதிவாதியிடம் நான் தபசில் சொத்தினை கிரையம் செய்து கேட்டு வந்தாகவும், அதற்கு பிரதிவாதி நாள் கடத்தி வந்ததாகவும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் கடனுறுதி சீட்டு 28.12.2020 ம் தேதி பிரதிவாதியும், அவரது மனைவியும் எனக்கு எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். மேற்படி கடனுறுதி சீட்டு அடங்கிய ஸ்ரீவைகுண்டம் சார்பு நீதிமன்ற நகல் மனு எண் 1095/2025 ன் சான்றிட்ட நகல் பி.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6.பி.சா.ஆ 1 கடனுறுதி சீட்டு ஏற்கனவே பிரதிவாதி வாங்கி கடன்தொகை ரூபாய் 70 ஆயிரம், அதற்கான வட்டி மற்றும் கூடுதலாக ரூபாய் 25 ஆயிரம் கடன் வாங்கியதற்கு எழுதப்பட்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ 1 கடனுறுதி சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு செய்து அதில் எனக்கு தீர்ப்பாகியுள்ளது. இவ்வழக்கில் பி.சா.ஆ 1 கடனுறுதி சீட்டு பற்றி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அது வேறு இது வேறு ஆகும். பாக்கி கிரைய தொகை ரூபாய் 10 ஆயிரத்தை செலுத்தி கிரையம் பெற நான் ஒருபோதும் தயாராகவும், விருப்பத்துடனும் இல்லை என்றால் சரியல்ல.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.28 18:07:49 +0530

7.நான் வட்டி வாங்கும் நோக்கத்தில் கிரையம் ஒப்பந்தம் எழுதி வாங்கியதால் தான் அதனை வலியுறுத்தி செயல்படுத்தவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியும், அவரது மனைவியும் பி.சா.ஆ1 கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்ததால் கிரையம் செய்து தர வேண்டிய அவசியம் பிரதிவாதிக்கு இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியை கட்டாயப்படுத்தி கிரையம் ஒப்பந்தம் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. தபசில் சொத்து பிரதிவாதிக்கு எப்படி பாத்தியம் என்றால் உயில் மூலம் பாத்தியம்.

8.தபசில் சொத்தின் சர்வே எண் ஞாபகம் இல்லை. நான் கடனாக ரூபாய் 70 ஆயிரம் கொடுத்ததால் தான் சர்வே ஞாபகம் இல்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் ஞாபகம் இல்லை. தபசில் சொத்து உள்ள கிராமத்தில் வேறு சொத்து எதுவும் கிரையம் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. நான் கெட்டியம்மாள்புரத்தில் வசித்து வருகிறேன். தபசில் சொத்துக்கும், எனது வீட்டிற்கு சுமார் 7 கிலோமீட்டர் தூரம் இருக்கும்.

9.தபசில் சொத்தின் மொத்த மதிப்பு அரசு வழிகாட்டி மதிப்பின் படி ரூபாய் 96,144 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தபசில் சொத்தின் சந்தை மதிப்பு பல இலட்சம் இருக்கும் என்றால் சரியல்ல. தபசில் சொத்தின் மதிப்பு பல லட்சம் இருப்பதால் ரூபாய் 80 ஆயிரத்திற்கு எனக்கு கிரையம் ஒப்பந்தம் எழுதி தர அவசியம் இல்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கு காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் விவசாயி மற்றும் விவசாய கூலி ஆவேன்.

10.என்னிடம் வட்டிக்கு கடன் கேட்டால் கடன் கொடுப்பேன் என்றால் இல்லை. ஆளை பொறுத்து நம்பிக்கையின் அடிப்படையில் கடன் கொடுப்பேன். திருச்செந்தூர் சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம் சார்பு நீதிமன்றம் மற்றும் இந்நீதிமன்றத்தில் சொத்து மற்றும் கடன் சம்பந்தமாக 20 க்கும் மேற்பட்ட வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் ராசையா என்பவருக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 86/2023 தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் ரூபாய் 23 ஆயிரத்திற்கு

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.28 18:07:54 +0530

கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி ரூபாய் 20 ஆயிரம் முன்பணம் கொடுத்து ரூபாய் 3 ஆயிரத்திற்கு 2 வருட காலம் அவகாசம் கொடுத்து கிரையம் ஒப்பந்தம் போட்டதாக சொல்லியிருந்தேன் என்றால் சரிதான்.

11.இந்நீதிமன்றத்தில் ஆனந்தபாபு, அசோக் மற்றும் அன்புராஜ் என்ற அன்பு ஆகியோருக்கு எதிராக அசல் வழக்கு எண் 143/2024 கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பாணை பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் ரூபாய் 90 ஆயிரத்திற்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி முன்பணம் ரூபாய் 60 ஆயிரம் கொடுத்து ரூபாய் 30 ஆயிரத்திற்கு 2 வருட கால அவகாசத்திற்கு கிரைய ஒப்பந்தம் போட்டிருந்ததாக சொல்லியிருந்தேன் என்றால் சரிதான்.

12.நான் தடிக்காரன் என்பவருக்கு எதிராக ஸ்ரீவைகுண்டம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 286/2023 தாக்கல் செய்து தீர்ப்பாணை பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் ரூபாய் 2 லட்சம் கிரைய தொகை பேசி ரூபாய் 1 லட்சத்து 80 ஆயிரம் முன்பணம் கொடுத்து ரூபாய் 20 ஆயிரத்திற்கு 2 வருட கால அவகாசம் விதித்து கிரைய ஒப்பந்தம் போட்டிருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 3 வழக்குகளிலும் ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாகியுள்ளது என்றால் அது தீர்ப்பு தான்.

13.மேற்படி வழக்குகளில் தீர்ப்புகளை நிறைவேற்ற நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நடவடிக்கை எடுத்து வருகிறேன். பிரதிவாதிகளை மேற்படி வழக்கில் முன்னிலை ஆகவிடாமல் ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாணை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை பெற்று சம்பந்தப்பட்ட நபர்களிடம் அதிகபட்ச வட்டி வாங்குகிறேன் என்றால் சரியல்ல. ஸ்ரீவைகுண்டம் காவல் துறையில் என்மீது கந்துவட்டி சம்பந்தமாக குற்ற எண் 177/2022 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பொய் வழக்கு ஆகும். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது என்றல் ஆம்.

14.நான் தாக்கல் செய்துள்ள கிரைய ஒப்பந்தத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளனர் என்றால் தர்மலிங்கம் மற்றும் அருணாசல சுரேஷ்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.28 18:07:58 +0530

ஆவர். அவர்கள் என் சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி சமுதாயத்தை சார்ந்தவர்கள். என் பெயரில் பதிவாகியுள்ள ஆவணங்களில் மேற்படி நபர்கள் வேறு ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ளனரா என்றால் ஞாபகம் இல்லை.

15.மேற்படி சாட்சிகளை வேறு வழக்கில் விசாரித்துள்ளேனா என்றால் விசாரித்து இருப்பேன். எந்த வழக்கு என்று ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்குகளில் உள்ள ஆவணங்களில் மேற்படி நபர்களை தான் கையிருப்பு சாட்சிகளாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாங்கிய ரூபாய் 70 ஆயிரம் கடன் தொகைக்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ள கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 06.10.2022 ம் தேதி நான் பத்திர பதிவுக்கு தயார் செய்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.03.28 18:08:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.